செ.வெ.எண் : 354 2/7/2013

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006.

## செய்திக் குறிப்பு

தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட 539 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 2013–14ஆம் கல்வியாண்டிற்கான தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி முதலாமாண்டு மாணவர் சேர்க்கை இணையதள வழியாக (Online Counselling) ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள மையத்தில் ஜூலை 8 முதல் 15 வரை நடைபெறவுள்ளது.

மேற்கண்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் 17,045 காலியிடங்கள் ஒற்றைச் சாளர முறையில் நிரப்பப்பட உள்ளன. தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பில் சேர தகுதி வாய்ந்த மேனிலைக் கல்வி முடித்த மாணவர்களிடமிருந்து 4,430 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் மாணவர்கள் 429 மற்றும் மாணவியர்கள் 4,001 ஆகும். விண்ணப்பித்துள்ள மாணவ, மாணவியர்கள் பெற்றுள்ள மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசை பட்டியல் (Rank List) தயாரிக்கப்பட்டு நடைமுறையிலுள்ள இட ஒதுக்கீட்டு விதிமுறைளைப் பின்பற்றி கலந்தாய்வு நடைபெற உள்ளது. விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கான இடம், நாள் மற்றும் நேரம் அடங்கிய அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட உள்ளன.

கலந்தாய்வில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்கள் கீழ்க்கண்ட அசல் சான்றிதழ்களான பத்தாம் வகுப்பு மேல்நிலைக் கல்வித் தேர்ச்சிக்கான சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், மாற்றுத் திறனாளிகள், சுதந்திர போராட்டத் தியாகிகளின் பேரன்/ பேத்திகள், முன்னாள் இராணுவத்தினரின் மகன் / மகள் போன்ற சிறப்புப் பிரிவினராக இருப்பின் அதற்கான சான்றிதழ்கள் ஆகியவற்றை கலந்தாய்வின் போது முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

கலந்தாய்வு நடைபெறும் நாள் சார்ந்த விவரம்

| வ. எண். | கலந்தாய்வு நடைபெறும் நாள் | பாடப்பிரிவு |
|---|---|---|
| 1. | 08.07.2013<br>திங்கட்கிழமை | • சிறப்பு பிரிவினர் (மாற்றுத் திறனாளிகள், சுதந்திர போராட்டத் தியாகிகளின் பேரன், பேத்திகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினரின் மகன் / மகள்)<br>• சிறுபான்மை மொழியில் (Minority Language) பயில விண்ணப்பித்துள்ள மாணவ, மாணவிகள்<br>• ஆங்கில மொழியில் பயில விண்ணப்பித்துள்ள மாணவிகள் |
| 2. | 09.07.2013<br>செவ்வாய்கிழமை | தொழிற்பிரிவு (Vocational) மாணவ, மாணவிகள் |
| 3. | 10.07.2013<br>புதன்கிழமை மற்றும்<br>11.07.2013<br>வியாழக்கிழமை | கலைப்பிரிவு (Arts Group) மாணவ, மாணவிகள் |
| 4. | 12.07.2013<br>வெள்ளிக்கிழமை,<br>13.07.2013<br>சனிக்கிழமை மற்றும்<br>15.07.2013<br>திங்கட்கிழமை | அறிவியல் பிரிவு (Science Group) மாணவ, மாணவிகள் |

கலந்தாய்வு மேற்கண்ட நாட்களில் காலை 9.00 மணிக்குத் தொடங்கும்.

கலந்தாய்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ, மாணவியர்களின் தரவரிசைப் பட்டியல் (Rank List) மாவட்டங்களில் கலந்தாய்வு நடைபெறும் இடம் அனைத்தும் www.tnscert.org என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9